விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 240 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 31 சனிக்கிழமை (16.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பொதுச் சத்திரசிகிச்சை நிபுணர் சுதர்சன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பிரபல பொதுச் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் வெங்கடாசலம் சுதர்சன் (வயது-49) நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் மாரடைப்புக் காரணமாக காலமானார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீண்ட காலமாகச் சேவையாற்றிய சுதர்சன் அவசர சத்திரசிகிச்சைகள், அரிய வகை அறுவைச் 02ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காற்றாலை
## பிரச்சினைகளை ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை முன்னெடுப்பதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாரத்துக்குள் இக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே இறுதித் தீர்மானம் 16ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் ஆக்கப்பட்டமை
# இடம்பெற்றன என்பதை அரசு ஏற்க வேண்டும்
### ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்



(கொழும்பு)

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம்பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் வலியுறுத்தியுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார 15ஆம் பக்கம் பார்க்க

## கொக்குவில் மீன் சந்தையில்
## பாவனைக்கு உதவாத 134 கிலோ மீன்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மீன் சந்தையில் பாவனைக்கு உதவாத 134 கிலோகிராம் மீன்கள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ராஜமேனனது நடவடிக்கையால் நேற்று அழிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மீன்சந்தையில் மீன்களை ஐஸ் கியூப் இல் போட்டு வைத்து 02ஆம் பக்கம் பார்க்க

## மீசாலை கிழக்கில்
## பாவனையற்ற கிணற்றில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

மீசாலை கிழக்கில் பாவனையற்ற கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த கோவிந்தபிள்ளை வேலுப்பிள்ளை (வயது - 70) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் (14) கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசியதை அவதானித்த அயலவர்கள் 15ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றாதது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அநுர அரசாங்கம் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு 15ஆம் பக்கம் பார்க்க

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம்
## விமல் வீரவன்சவிடம் 3 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 3 மணி நேரம் வாக்குமூலம் பெற்றுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக வாக்குமூலம் பெற குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு விமல் வீரவன்சவுக்கு அறிவிக்கப் 15ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு
## 25,573 பேர் கைது

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 25,573 பேர் கைது 15ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் மஹோற்சவத்தின் விசேட திருவிழாக்களில்
### 600 பொலிஸார் கடமையில்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத்தின் மஹோற்சவ விசேட திருவிழாக்கள் நடைபெறவுள்ள நிலையில் ஆலயச் சூழலில், கொழும்பில் இருந்து அழைக்கப்பட்டுள்ள பொலிஸ் விசேட அணி உள்ளிட்ட 600 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.பி.எஸ். 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"தமிழ்மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்" எனும் கருப் பொருளில் ஆறாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடானது நேற்று வெள்ளிக்கிழமை (15.08.2025) காலை 09 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் முதுநிலைப் பேராசிரியருமான கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் வெகுசிறப்பாக இடம்பெற்றது. இந் நிகழ்வில் மண்டபம் நிறைந்த வகையில் கல்வியியலாளர்கள், பல்துறைசார்ந்தவர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள் - ரவிசாந்)

## இடம்பெற்றன...

சுதந்திர ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவர கெதர மற்றும் எம்.எப்.எம்.பஸீர் ஆகியோர் எழுதிய "செம்மணி" எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வும் அதனைத்தொடர்ந்து "இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் மனிதப்புதைகுழிகள்" எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்கலந்துரையாடலில் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 2018 ஆம் ஆண்டு காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு வருடகாலம் அதன் தவிசாளராகப் பணியாற்றினேன்.

அவ்வேளையில் அலுவலகத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால் நாம் சென்று பார்த்தபோது எமக்கான அலுவலகம் கூட இருக்கவில்லை. எனவே எவ்வாறிருப்பினும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்கு அவசியமான வளங்கள் மற்றும் வசதிகள் இல்லாமலும், தீர்வு காணவேண்டும் என்ற உண்மையான அரசியல் தன்முனைப்பின்றியும் எதனையும் செய்யமுடியாது.

அதேபோன்று காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் நீதியமைச்சின்கீழ் இயங்குகின்றது. அவ்வாறிருக்கையில் அந்த அலுவலகத்தினால் சுதந்திரமாகச் செயற்படமுடியாது. காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உரியவாறு இயங்குவதற்கு அதற்குரிய சுதந்திரமும் வளங்களும் வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது சற்றும் நம்பிக்கை இருக்கவில்லை. அவர்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு நிலவியபோதிலும் எம்மால் இயலுமானளவுக்கு நாம் பல்வேறு விடயங்களைச் செய்தோம்.

இவ்விவகாரத்துக்கு சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதொரு விடயமாகும். எனவே நாம் உள்ளகப்பொறிமுறையை மேலும் பலப்படுத்தவேண்டும்.

அதுமாத்திரமன்றி இவ்வாறான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் உண்மையிலேயே இடம்பெற்றனவா? என்ற கேள்வி தெற்கில் வாழும் பலருக்கு உண்டு. எனவே இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றன என்ற உண்மையை நாம் எவ்வாறு தெற்கு மக்களுக்குப் புரிய வைக்கப்போகிறோம் என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இவ்விடயத்தில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் நிலவும் இடைவெளியை எவ்வாறு சீரமைக்கப் போகிறோம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

மேலும் இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம் பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுமாத்திரமன்றி இவ்விடயம் சார்ந்து அரச கட்டமைப்பை எவ்வாறு மாற்றியமைக்கவேண்டும் எனக் கலந்துரையாடவேண்டும் என்று வலியுறுத்தினார். (ம-7)

## யாழ். வந்தார் பாடகர் மனோ

தென்னிந்தியப் பிரபல பாடகர் மனோ இசை நிகழ்ச்சியொன்றில் பங்கேற்பதற்காக பலாலி சர்வதேச விமான நிலையமூடாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

மாலை நல்லைக் கந்தனைத் தரிசித்த அவர் ஊடக சந்திப்பிலும் கலந்து கொண்டிருந்தார். (ம-7)

## பாவனைக்கு...

விட்டு சில மீனவர்கள் சென்று விடுகின்றனர். வெள்ளிக்கிழமைகளில் சந்தை திறப்பதில்லை.

ஆகையால் வியாழக்கிழமைகளில் மீன்களை ஐஸ் கியூப் பெட்டிக்குள் வைத்து விட்டுச் சென்று விடுவார்கள்.

அந்த மீன்களையே சனிக்கிழமை எடுத்து விற்பனை செய்வார்கள்.

வியாழக்கிழமை ஐஸ் கியூப்பிற்குள் வைக்கப்பட்ட மீன்களை சனிக்கிழமை எடுக்கும் போது அந்த மீன்கள் அழுகிய நிலையில் காணப்படும்.

இவ்வாறு குறித்த சந்தையில் மீன்கள் விற்கப்படுவதாக சுகாதார பரிசோதகருக்குமுறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய சுகாதாரப் பரிசோதகர் களவிஜயம் மேற்கொண்ட நிலையில் மீன்கள் ஐஸ்பெட்டிக்குள் கரைந்து அழுகிய நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து பாவனைக்கு உதவாத கிட்டத்தட்ட 134 கிலோகிராம் மீன்கள் அழிக்கப்பட்டதுடன், மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தால் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த மீனவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொதுச் சத்திர ...


சிகிச்சைகள் மற்றும் மருத்துவக் கல்விப் பயிற்சிகளில் அதிகளவான பங்களிப்பைச் செய்துள்ளார்.

மருத்துவர் சுதர்சனின் இறுதிக் கிரியைகள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 - 01 - 1945

இறப்பு 14 - 08 - 2025



### திருநாவுக்கரசு பாலசுப்பிரமணியம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பாலசுப்பிரமணியம் கடந்த (14.08.2025) வியாழக்கிழமை அன்று உடுப்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - நல்லம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தர் - தங்கம்மா தம்பதியின் மருமகனும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும் சாந்தகுமார் (கனடா), வசந்தகுமார் (அமெரிக்கா), காலஞ்சென்ற சாந்தினி, வசந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரராஜசேகரம், ராஜன் (லண்டன்), ரேகா (கனடா), ரஞ்சினி(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற இரட்ணசிங்கம், விக்னேஸ்வரன் மற்றும் செல்வமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பேரின்பநாயகம், சித்திமேரி, இராசலிங் கம் (பிரான்ஸ்), யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாளினி, நிருஷா, காவியா, அக்சயா, ஆதித்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (17.08.2025) மு.ப 11.00 மணியளவில் உடுப்பிட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று மதியம் பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


தகவல் குடும்பத்தினர்

(C-3656)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
[1431]
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WU MoneyGram Ria
உடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

வேலைவாய்ப்பு
யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு பெண் பணியாளர்கள் தேவை.
◆ Adminstration
◆ Computer Billing + Cashier
◆ Sales Assistant
வயது எல்லை 18-40
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
[5058]
0774195209, 0774195218

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா திருப்பலி நேற்றைய தினம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனி பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அநுராதபுரம் மறை மாவட்ட ஆயர் நோபட் அன்ராடி, காலி மறை மாவட்ட ஆயர் ரேமன் விக்ரமசிங்க, இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர் அன்ரன் வைமன் குரூஸ், மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை, மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். திருவிழா திருப்பலியை தொடர்ந்து திருச் சொரூப பவனியும் திருச்சொரூப ஆசியும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.(படங்கள் : ஜோசப்நயன்)

# முத்துஜயன் கட்டுச் சம்பவம்

# ஹர்த்தாலுக்கு அவசியமில்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு



**(கொழும்பு)**

**முத்துஜயன்கட்டு சம்பவம் தொடர்பில் ஹர்த்தாலிற்கான தேவையில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜய பால தெரிவித்துள்ளார்.**

முத்துஜயன்கட்டு சம்பவம் தொடர்பில் ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அதற்கான தேவையில்லை.

அந்த சம்பவத்துடன் தொடர்புடைய தனிநபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். ஹர்த்தால் என்றாலும் சரி இல்லாவிட்டாலும் எங்களால் வேறு எதனையும் செய்ய முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்போம். ஹர்த்தால் போராட்டத்தில் ஈடுபடுவது அர்த்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய மாகாணங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அதற்காக அங்கே எவரும் ஹர்த்தாலில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாங்கள் இந்த சம்பவத்தினை இன, மத அடிப்படையில் பார்க்கக் கூடாது. குற்றங்கள் இடம்பெற்றால் பொலிஸார் அதற்கு காரணமானவர்களிற்கு எதிராக அவர்களின் பின்னணியை கருத்தில் கொள்ளாமல் நடவடிக்கை எடுப்பார்கள். கடந்த சில மாதங்களாக நாங்கள் இதனையே செய்கின்றோம் என்பதை நிரூபித்துள்ளோம் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையின் பொருளாதார மீட்சி எதிர்பார்த்ததை விட வேகமாக உள்ளது

## மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மீட்சி ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட தற்போது வேகமாக முன்னேறி வருவதாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார். இது குறித்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் பொருளாதார மீட்சி ஆரம்பத்தில் நாம் எதிர்பார்த்ததை விடவும் தற்போது வேகமாக முன்னேறி வருகின்றது.

ஒரு நாடு நெருக்கடியால் பாதிக்கப்பட்டவுடன், உற்பத்தி இழப்பை மீட்டெடுக்க நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

எங்கள் விடயத்தில், மூன்று ஆண்டுகளுக்குள் அந்த நிலையை அடைந்துள்ளோம் அடுத்த ஆண்டுக்குள், வேலை வாய்ப்பு, வறுமைக் குறைப்பு, வருமானம் மற்றும் வாழ்க்கைச் செலவு போன்ற முக்கிய துறைகளில் இலங்கை நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விட சிறப்பாக இருக்கும். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் வருமானம் அதிகமாக இருக்கும். அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில், நாம் முன்பு இருந்த நிலையை அடைய முடியும்" இவ்வாறு நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# யானைகள் இறப்பு விகிதத்தில் உலகளவில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

யானைகள் இறப்பு விகிதத்தில் இலங்கை தற்போது உலகிலேயே முதலிடத்தில் உள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு மன்றம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 288 யானைகளின் இறப்புகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம், 2020 முதல் 2024 வரை, 2,000இற்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழந்துள்ளன.

வேட்டையாடுதல், தொடருந்து மோதல்கள் மற்றும் மனித-யானை மோதல் காரணமாகவே யானைகளின் இந்த இறப்புகள் பதிவாகியுள்ளன.

பெரும்பாலும் யானைகளின் தந்தங்களைப் பெற்று அதிக விலையில் விற்பனை செய்யும் நோக்கத்துடனேயே யானைகள் கொல்லப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. (நி)

# லொஹான் ரத்வத்த காலமானார்

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த காலமானார்.



உடல் நலக் குறைவினால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று தனது 57ஆவது வயதில் காலமானார்.

அவரது மறைவிற்கு அரசியல் பிரமுகர்கள் உட்பட பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## அவுஸ்ரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் ரி-20 இறுதிப் போட்டி இன்று!

## தொடரை வெல்லப் போவது யார்?

**தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதும் போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இரண்டு போட்டிகள் முடிவடைந்த நிலையில் தற்பொழுது தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இந்நிலையில் வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது போட்டி இன்று இடம்பெறவுள்ளது.**

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்து முடிந்த முதல் ரி-20 போட்டியில், அவுஸ்திரேலிய அணி 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில், தென்னாபிரிக்கா அணி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம், 1-1 என தொடர் சமனில் உள்ளது. இந்நிலையில், அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான 3 ஆவது ரி-20 போட்டி, இன்று கெய்ர்ன்ஸில் உள்ள கசாலிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 2:45 மணிக்குத் தொடங்கும்



மிட்செல் மார்ஷ் தலைமையிலான அவுஸ்திரேலியா அணி, ஐடன் மார்க்ரம் தலைமையிலான தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில், வெற்றி பெறும் அணி தொடரை கைப்பற்றும். இதனால், இப்போட்டியில் அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரு அணிகளும் இதுவரை 27 ரி- 20ஐ போட்டிகளில் நேருக்குநேர் மோதியுள்ளன. இதில், ஆஸ்திரேலிய அணி 18 போட்டிகளிலும், தென்னாபிரிக்க அணி 9 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

## கிரிக்கெட் போட்டியை தவிர்ப்பதில் ஒன்றும் குறைந்து விடாது – ஹர்பஜன்



ஆசிய கோப்பை 2025 கிரிக்கெட் தொடர் செப்டெம்பர் 9ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் தொடங்கவுள்ளது. இதில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் செப்ரெம்பர் 14ஆம் திகதி மோதுகின்றன.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாள ரான ஹர்பஜன் சிங், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தனியார் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளதாவது, எல்லையில் நமது வீரர்கள் உயிர் தியாகம் செய்துகொண்டிருக்கும் போது நாம் எப்படி பாகிஸ்தானுடன் கிரிக்கெட் விளையாட முடியும்?

ஒரு கிரிக்கெட் போட்டியைத் தவிர்ப்பதால் ஒன்றும் குறைந்துவிடாது. நமது வீரர்களின் தியாகத்துடன் ஒப்பிடும் போது கிரிக்கெட் எல்லாம் ஒன்றுமே இல்லை.

இரு நாடுகளுக்குமிடையில் சண்டை நீடிக்கும்போது நாம் கிரிக்கெட் விளையாடச் செல்வது சரியாக இருக்காது.

இரத்தமும் நீரும் ஒன்றாக ஓடமுடியாது என்பது நமது அரசாங்கத்தின் நிலைப்பாடு. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (3)

## மாகாணமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மாணவிக்கு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் அச்சுவேலி யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவி ர.ஹபிதா தங்கப் பதக்கத்தை கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட குத்துச் சண்டைப் போட்டி கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

இக் குத்துச் சண்டைப் போட்டியில் அச்சுவேலி யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவி ர.ஹபிதா 18 வயதுப்பிரிவில் 54-57 கிலோ எடைப் பிரிவில் பங்கு பற்றி இறுதி சுற்றில் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவியை எதிர்கொண்டு அதில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

பாடசாலை வரலாற்றில் குத்துச் சண்டையில் பதக்கம் வென்றது இதுவே முதல் தடவையாகும். (3-90)

## சிறந்த துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் ப்ரீவிஸ் 80 இடங்களுக்கு முன்னேற்றம்

அவுஸ்திரேலியா - தென் ஆப்பிரிக்கா இடையே 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் 2 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 1-1 கணக்கில் சமநிலையில் உள்ளது.

இதில் வீரர்களின் செயல்பாடுகளை கணக்கில் கொண்டு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ரி-20 போட்டிகளில் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டது.

இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ரி-20 போட்டியில் 125 ஓட்டங்கள் குவித்த தென் ஆப்பிரிக்க அதிரடி வீரர் டிவால்ட் பிரேவிஸ் 80 இடங்கள் எகிறி 21 ஆவது இடத்தை பிடித்துள்ளார். அவுஸ்திரேலியாவின் டிம் டேவிட் 6 இடங்கள் உயர்ந்து 10ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

பந்து வீச்சாளர் தரவரிசையில் நியூசிலாந்தின் ஜேக்கப் டப்பி, இங்கிலாந்தின் அடில் ரஷித், மேற்கிந்திய தீவின் அகீல் ஹுசைன், இந்தியாவின் வருண் சக்ரவர்த்தி, அவுஸ்திரேலியாவின் ஆடம் ஜம்பா முதல் 5 இடங்களில் மாற்றமின்றி தொடருகிறார்கள். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமாணி வெளிவாரிப் பட்டப்படிப்பு

# விரைவில் ஆரம்பிக்கத் திட்டம்

## யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் விஞ்ஞானமாணி வெளிவாரிப் பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக உயர்தரத்தில் கணித, உயிரியல் பிரிவுகளில் கல்வி கற்றுவிட்டு பல்கலைக்கழக அனுமதியைத் தவற விட்ட மாணவர்களை மையப்படுத்தியதாக இக் கற்கைநெறி அமையும்.

விஞ்ஞானக் கல்வி மேம்பாடு அது சார்ந்த தொழில்துறைகளின் விருத்தி என்பவற்றை இலக்காக கொண்டு இக் கற்கை ஆரம்பிக்கப்படுகின்றது.

கற்கைநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னதான தேவைப்பாடுகளுள் ஒன்றான பொறுப்புதாரர் கருத்துக்களைப் பெறல் மற்றும் தேவைப் பகுப்பாய்வு நோக்கில் இவ் வினாக்கொத்து தங்களிடம் பகிரப்படுகின்றது. வினாக்கொத்தினை https://www.sci.jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தங்கள் பெறுமதியான நேரத்தில் சில நிமிடங்களை ஒதுக்குவதன் மூலம் நமது பிராந்தியத்தில் ஒரு பெறுமதியான கற்கைநெறி ஆரம்பிக்கப்படுவதற்கான கருத்தியல் தளத்துக்கு வலுச்சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தாங்கள் பகிரும் தகவல்கள் எக்காரணம் கொண்டு பகிரங்கப்படுத்தப்படமாட்டாது எனவும் தெரிவித்தார். (நி-3)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06 - 01 - 1976

மறைவு 15 - 08 - 2025

அமரர்

## வெங்கடாசலம் சுதர்சன்

[பொது சத்திரசிகிச்சை நிபுணர்– யாழ். போதனா வைத்தியசாலை]

எமது நண்பன் செந்தூரனின் அன்பு அண்ணா **அமரர்.வெங்கடாசலம் சுதர்சன்** (பொது சத்திரசிகிச்சை நிபுணர்) அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்

(1444)

**யா/இந்துக் கல்லூரி 2002 A/L நண்பர்கள்.**

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். செல்வராசா புவனேஸ்வரி



பிறப்பு – 1946.07.01

இறப்பு – 2024.07.28

ஓராண்டு கடந்தாலும் - எங்கள்
இல்லத்தரசி நீ இல்லாத - வாழ்வு
நிலையில்லாத நீர்துளி போல்
நினைவில் உன் முகம்
வந்திங்கு வாட்டுதம்மா!

தமிழ்ச்செல்வன் குடும்பம்

(1436)

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.


# இராசிபலன்

16.08.2025
ஆடி 31,சனிக்கிழமை
அட்டமி முன்னிரவு 11.17மணி வரை

பரணி முற்பகல் 8.35 மணிவரை
சுப நேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05 -10.35 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்
சித்திரை.

**வளவன்**

**மேஷம்:** காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கடகம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** காலைப் பொழுது கலகலப்பாகவும் மாலைப் பொழுது சலசலப் பாகவும் அமையும், வேலைச் சுமை கூடும், சேமிப்புகள் கரையும் வாய்ப் புண்டு.பிரயாண பயமுண்டு.

**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போட்டியாகச் செயற்பட்ட வர்கள் மனம் மாறுவர்.

**ரிஷபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இணங்கண்டு கொள்வீர்கள் போசன சுகமுண்டு, உடல் நலன் சீராகும், உணவில் கட்டுப்பாடு தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**கும்பம்:** போசன சுகமுண்டு, வளர்ச்சிப்பாதையில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**இரகசியமாகச் செய்த பாவம் சாகும்வரை குத்தும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போன மாம்பழம்

(கரணவாய்)

நாகர்கோவில் வடக்கு முருகையா தேவஸ்தான மாம்பழத் திருவிழாவில் மாம்பழம் ஒன்று 10 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போன சம்பவம் பதிவாகியுள்ளது.

மேற்படி ஆலயத்தின் கொடியேற்ற திருவிழா கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரமபமாகியது. இதன் ஏழாம் திருவிழாவான மாம்பழத்திருவிழா நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரவு முருகனுக்கும் விநாயகப் பெருமானிற்கும் இடையில் இடம் பெற்ற போட்டியில் உலகைச் சுற்றி முதலில் வலம்வருபவருக்கே மாம்பழம் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து முருகப் பெருமான் மயில் ஏறி உலகைச் சுற்ற செல்ல விநாயகப் பெருமான் அம்மை அப்பனாகிய சிவனையும் உமாதேவியாரையும் வலம் வந்து மாம்பழத்தை பெற்றுக் கொண்ட நாடகம் அரங்கேறியது.



குறித்த நாடகம் இடம் பெற்றதைத் தொடர்ந்து மாம்பழம் ஏலம் கூறப்பட்டது. இதில் பத்தாயிரம் ரூபாய்க்கு மாம்பழம் முதலில் ஏலம் கூறப்பட்டு சில நொடிகளில் ஆறு இலட்சம் ரூபாய் வரையில் சென்றது. பின்னர் படிப்படியாக உயர்ந்து சில நிமிடங்களில் 10 இலட்சம் ரூபாவிற்கு இறுதியாக ஏலம் விடப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-60)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து நடத்தும் "தெய்வீக இசையரங்கு" இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள், வயலின் - திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் - மு. சுலக்சன், கெஞ்சிரா - செல்வன் புவனேஸ்வரன் வேணுகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம் பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு - திருமதி தாரணி ராஜ்குமார், வயலின் - இ.நிறோசன், மிருதங்கம் - வ.றமணசர்மா, முகர்சிங் - செல்வன் றமணசர்மா லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# தர்மக்கேணி விவசாயிகளுடன் சிறீதரன் எம்.பி சந்திப்பு!

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட தர்மக்கேணி பகுதியில் விவ சாய நடவடிக்கைகளுக்கு பாதி ப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் இலங்கை புகையிரத திணைக் களத்தினால் மேற் கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும், விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறின்றி அதனை அணுகும் வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரை யாடும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் அவர்கள் நேற்று முன் தினம் குறித்த பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக் கப்பட்ட விவசாயிகளுடனும் கலந்துரை யாடியுள்ளார்.

தர்மக்கேணிப் பகுதியில் புகையிரத ஓடுபாதைக்கு அருகில் விவசாய நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாகவும், உடனடியாக அவற்றை இடைநிறுத்துமாறும் புகையிரத திணைக்களத்தால் குறித்த விவசாயிகள் மீது பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் அதுகுறித்த பாதிக்கப்பட்ட விவசாயிகள் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரியப் படுத்தியதை அடுத்து உரிய தரப்பினருடனான இணக்கப் பேச்சுகளின் மூலம் விவசாயி களுக்கு போதிய கால அவகாசம் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன், எதிர்வரும் காலங்களில் புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் குத்தகை அடிப்படையில் குறித்த நிலத்தைப் பெற்று விவசாயம் செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிர மணியம் சுரேன், உப தவிசாளர் சிவகுரு செல்வராசா, உறுப்பினர் முத்துக்குமார் கவிப்பிரகாஸ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# உயர்தர மாணவர்களுக்கான பௌதீகவியல் செயன்முறை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையம் நடத்தும் உயர்தர இறுதிப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பௌதீகவியல் செயன்முறை வகுப்பு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து 5 நாட்கள் தொண்டைமனாறு வெளிக்கள நிலைய ஆய்வு கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 1 ஆம் மற்றும் 2 ஆம் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை பதிவுகளை மேற்கொண்டு அனுமதி அட்டையையும் முன்னாயத்தக் கையேடுகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் தேசிய வெளிக்கள நிலையம் 133, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைத்துள்ள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். மேலதிக தொடர்புகளுக்கு 077 704 4120 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

## நல்லூர் உற்வசகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் அருளுரை இன்று சனிக்கிழமை இரவு 8 மணிமுதல் 8.30 மணிவரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "பொறுமையால் அகந்தையை அழித்திடுவோம்!" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)



நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்கள் 63 நாயன்மார்கள் வேட மணிந்து ஊர்வலமாக நல்லூர் ஆலயத்தை சென்றடைந்த போது.




## கா! நல்லைக் குமரேசனே!

ஆதிசக்தி யம்மையவள் பாதியுரு வானசிவன்
மீதிவிழிப் பொறியிலுதித்த
சோதிவடி வானவடி வேலவனின் கோலமதை
சொல்லவொரு வார்த்தையுளதோ!
மோதிவரும் சூரனையும் மூழ்கடித்து வானவற்கு
முந்தியருள் தந்தபெருமான்
நாதியில்லை யென்பவற்கும் நீதிநெறி காட்டும்பதி
நனிநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## நல்லையம்புதி நல்லாசான்

திருகார்த்திகை திருநாளில்
கந்தன் வள்ளி தெய்வானையுடன்
பூச்சப்பறம் தனில்
பவனி வரும் காட்சி காண
வரும் பக்தர்களுக்கு கேட்ட
வரம் அளிப்பான்
நல்லையம்பதி நல்லாசான்

நல்லை ஆனந்தன்

## வேலவா!

வேலவா! என்று சொல்ல ஓடோடி வந்திடுவாய்
எங்கள் துன்பங்கள் அனைத்தும் நீர்த்திடுவாய்
ஒவ்வொரு நொடியும் எமக்கு அருளி கொண்டே இருப்பாய்
உன் திருகாட்சியை எமக்கு எப்போதும் தந்திடுவாய்
உன்னை என் விழிகளால் பார்க்க பார்க்க என்
நாவில் உன் திருப்பாடல்களே எழுகின்றன வேலவா

பிரதீபன் பிரணவி,
நாயன்மார்கட்டு, நல்லூர்

## அதர்மம் அழித்திட வா நீ...

சிவசக்தியின் குமரனே
நல்லையூர் வேலவனே
உன் அழகை கண்டிடவே
இணைவிழிகளும் போதாதே முருகா...

கரம் கூப்பி தொழுதிடவே
இணைவிழி நீர் நிறைந்திடுதே
இருபத்து ஐந்து நாட்களுமே
எண்ணுவதற்குள் ஓடிடுதே முருகா...

தீவினைகள் அகற்றிடவே
அதர்மத்தை அழித்திடவே
தர்மத்தை நிலை நிறுத்திடவே
வந்திடய்யா ஆறுமுகனே முருகா....

வண்ணை சுமதி, ஓட்டுமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலுக்கு

## முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.**

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

மாகாண சபை தேர்தல் விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம்.

நீதியானதும் சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் தேர்தலை சிறந்த முறையில் நடத்துவோம்.

கடந்த 9 மாதகாலத்துக்குள் மூன்று தேர்தல்களை சிறந்த முறையில் நடத்தினோம். மாகாண சபைத் தேர்தல் முறையில் காணப்படும் சட்ட சிக்கலால் ஆணைக்குழுவினால் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க முடியாத தடை காணப்படுகிறது.

தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களில் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றமை வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்தார். (நி)

## இலங்கை வரும் அமெரிக்க கப்பல்



(கொழும்பு)

கரைக்கு அருகிலுள்ள கடற்பகுதியில் செயற்படும் (லிட்டோரல்) சுயாதீன மாற்றுரு போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். சான்டா பாப்ரா இட் இன்று சனிக்கிழமை கொழும்புத் துறைமுகத்திற்கு வருகைதரவுள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்திற்கு யு.எஸ்.எஸ். சான்டா பாப்ரா வருகைதரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையிலான நீண்டகால உறவுகளையும், உறவை வரையறுக்கும் நெருக்கமான ஒத்துழைப்பையும் இது பிரதிபலிக்கிறது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்: 5'9"
கி.பா: 05
தகைமை/தொழில்: BEng, Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15912

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
6 இல் சூரி செவ் கி.பா:8 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்-Diploma, Photographer (Norway)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15913

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம்
5 இல் சூரி செவ்
கி.பா: 12 1/2
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Diploma, Technical Manager(pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15916

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
7 இல் செவ் கி.பா:46
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15917

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L, Building Contractor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15918

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Management, Accountant (London)
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: G/15911

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: ரேவதி
1 இல் செவ்
கி.பா: 59
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc.Demo
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15914

பிறப்பு: 1997 RC
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15915

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BCom, DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15919

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
12 இல் செவ்
கி.பா: 12 1/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA(final year)
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15929

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# கீரிச் சம்பாவிற்கு பற்றாக்குறை ஏற்படுத்த சிலர் முயற்சி

## அமைச்சர் வசந்த சமரசிங்க

(கொழும்பு)

நாட்டில் கீரி சம்பா அரிசிக்கு செயற்கையாக பற்றாக்குறையை ஏற்படுத்த சிலர் முற்படுவதாக வர்த்தக, வாணிப, அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான தீர்வு கிடைக்கப் பெறாவிட்டால், கீரி சம்பாவுக்கான மாற்று அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தையில் கீரி சம்பாவுக்கு மாத்திரமே பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே கீரி சம்பாவுக்கான மாற்று அரிசியை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளோம்.

ஆனால் இதற்கான இறுதி முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. தற்போது சிறுபோக அறுவடை இடம்பெறுகின்றமையும் இதற்கான பிரதான காரணமாகும். இருப்பினும், நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கீரி சம்பா பற்றாக்குறை மேலும் மோசமடையுமானால், கீரி சம்பாவுக்கான மாற்று அரிசி வகையான 'GR11' இல் 40.000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய முடிவு எடுக்கப்படும்.

பொலன்னறுவையின் களஞ்சியசாலைகளில் மட்டும் 85.000 மெட்ரிக் தொன் கீரி சம்பா இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். அதில் ஒரு தொகை சந்தைக்கு விடுவிக்கப்படுமானால், இந்த பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும் என அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன் விழா நிகழ்வு சிறப்புப் பேருரை-2025

பேருரைத் தலைப்பு :
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன் விழாவில்-**
**யுத்த வலயத்தில் இருந்தெழும் கல்விசார் நோக்கு**
(An Educational Vision from the War Zone-
On the Golden Jubilee of the University of Jaffna)

பேருரை வழங்குனர் :
**பேராசிரியர். சுரேஸ் கனகராஜா**
**முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இவான் பவ் பல்கலைக்கழகப் பேராசிரியர்,**
**பெனின்-சில்வேனியா அரச பல்கலைக்கழகம்,**
**ஐக்கிய அமெரிக்கா.**

திகதி : 18.08.2025 (திங்கட்கிழமை)
பி.ப 3.30 மணி

நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்

(C-3654)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினம்


# செங்கோட்டையில் தேசியக் கொடி ஏற்றினார் பிரதமர் மோடி



79வது சுதந்திர தின விழா

**(டில்லி)**

**இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தையொட்டி, டில்லி செங்கோட்டையில் தேசியக்கொடி ஏற்றி பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.**



பிரதமராக மோடி 12 ஆவது முறையாக தேசியக்கொடி ஏற்றிய பெருமையை பெற்றார்.

முன்னதாக, அவர் முப்படைகளின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பிரதமர் மோடி சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது, உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த சுதந்திர தின வாழ்த்துக்கள். இந்த மங்களகரமான தருணம் அனைத்து நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் புதிய உற்சாகத்தையும் புதிய வீரியத்தையும் கொண்டு வரட்டும்.

இதனால் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவது புதிய உத்வேகத்தைப் பெறட்டும். ஜெய் ஹிந்த். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார். (நி)

## ஜம்மு-காஷ்மீரை புரட்டிப்போட்ட கனமழை 46 பேர் பலி, 200 இற்கும் மேற்பட்டோர் மாயம்

(டில்லி)

ஜம்மு - காஷ்மீரில் திடீரென பெய்த கன மழையால் சுமார் 46 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 200 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



120 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பிரபலமான புனித யாத்திரைப் பாதையில் ஒரு நிறுத்தப் புள்ளியான கிஷ்த்வார் மாவட்டத்தின் சசோதி நகரில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இமாசலப் பிரதேசத்தில் தொடர்ந்து பல நாட்களாகக் கனமழை பெய்து வருகிறது. அதனுடன் நிலச்சரிவு, வெள்ளம் என்பன தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன.

வெள்ளப் பெருக்கில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது.

அதிகமானோர் காணாமல் போயுள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இமயமலை மாநிலமான உத்தரகாண்டில் ஒரு கிராமம் முழுவதையும் பலத்த வெள்ளம் மற்றும் மண்சரிவு சூழ்ந்து. ஒரு வாரத்திற்குப் பிறகு இது நடந்துள்ளது. (நி)


## உலக சாதனை படைத்த கிளி

(பீஜிங்)

சீனாவைச் சேர்ந்த கிளி ஒன்று உலக சாதனை படைத்துள்ளது.

33.50 செக்கன்களில் 10 நிறங்களைக் கண்டுபிடித்த கிளி என்ற சாதனையை சீனாவை சேர்ந்த ஜியாங்கி படைத்துள்ளது.

ஒரே நிறம் கொண்ட பந்தை, அதே நிறம் கொண்ட கூடையில் போடுவதன் மூலம் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. (நி)



## ரோபோவின் முதலாவது வர்த்தக நிலையம் திறப்பு



(பீஜிங்)

மனித உருவ ரோபோவினால் இயக்கப்படும் உலகின் முதலாவது வர்த்தக நிலையமொன்று சீனாவின் பீஜிங்கில் திறக்கப்பட்டுள்ளது.

9 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட இந்த வர்த்தக நிலையம், கால்போட் என்ற மனித உருவ ரோபோவால் இயக்கப்படுகின்றது.

குறித்த வர்த்தக நிலையத்தில் பானங்கள் உள்ளிட்டவை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த ரோபோ பல மொழிகளைக் கையாளும் திறன் கொண்டது என வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (நி)

## தலையில் கொ சுற்றித் திரியு

### அமெரிக்காவி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தலையில் "கொம்புகள்" கொண்ட முயல்களின் புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

அமெரிக்காவின் ஃபோர்ட் காலின்ஸ் மற்றும் கொலராடோவின் பிற பகுதிகளில், தலை மற்றும் முகங்களில் இருந்து கொம்பு போன்ற பாகங்களை கொண்ட காட்டு முயல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலை ஷோப் பாப்பிலோமா என்ற வைரஸால் ஏற்படுகிறது என விஞ்ஞானிகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## இந்தியாவுடன் இணைந்து செயற்பட தயார் விருப்பம் தெரிவித்த சீனா

(பீஜிங்)

கூடுதல் வரிகளை விதித்து உலக நாடுகளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அச்சுறுத்தி வரும் நிலையில், இந்தியாவுடன் இணைந்து செயற்பட சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்தியாவுக்கு, வரியை 50 சதவீதமாக ஜனாதிபதி ட்ரம்ப் உயர்த்தி உள்ளார். இந்த அமெரிக்காவின் முடிவு என்பது நியாயமற்றது எனக் கூறியுள்ள மத்திய அரசு, தேசிய நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இந்தியாவைப் போல பிற நாடுகளுக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளதால், ஜனாதிபதி ட்ரம்ப்பின் இந்த முடிவுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதனிடையே இந்தியாவைப் போல ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் பொருட்களை வாங்கும் சீனாவுக்கும் அதிக வரிகளை விதிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாக சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் லின் ஜியன் கூறியதாவது, இந்தியாவும் சீனாவும் முக்கிய வளரும் நாடுகளாகும். இரு தரப்பும் ஒத்துழைக்கும் பட்சத்தில் இரு நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும். இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட பொது ஒப்பந்தங்களை செயற்படுத்த இந்தியாவுடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கிறோம்.

அரசியல் நம்பிக்கையை அதிகரிக்கவும் பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு போன்றவற்றில் ஒருங்கிணைந்து செயற்படுத்துதல் மூலமாக, இந்தியா - சீனா இடையிலான உறவுகளில் நல்ல வளர்ச்சியை அடைய முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)




## அரசாங்கத்தை கண்டித்து இஸ்ரேலில் பாரிய போராட்டம்

### 12 பேர் கைது



(டெல்அவில்)

காசா போரை நிறுத்தி, ஹமாஸ் வசமுள்ள பணயக் கைதிகளை மீட்டு வருமாறு கோரி இஸ்ரேலியர்கள் நேற்று டெல் அவிவ் நகரில் பாரிய போராட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது போராட்டக்காரர்கள் நகரின் முக்கிய வீதிகளில் போக்குவரத்தை முடக்கி, வீதியின் குறுக்கே கார் டயர்களை அடுக்கி தீ வைத்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் குறித்த பகுதியில் பல மணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. இதேவேளை போராட்டக்காரர்களை பொலிஸார் கலைக்க முயன்றபோது அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் மோதல் வெடித்தது. இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட 12 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

அண்மையில் ஹமாஸ் பிடியில் உள்ள 50 பணயக் கைதிகளில் சுமார் 20 பேர் மட்டுமே உயிருடன் இருக்கக்கூடும் என இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்த கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, பயணக் கைதிகளின் குடும்பத்தினர் மற்றும் பொது மக்கள், அரசின் நடவடிக்கைகளை விமர்சித்து, போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நிட்டா அம்பானிக்கு சொந்தமான நிறத்தை மாற்றும் சிற்றூர்ந்து

(டில்லி)


இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரரும், பிரபல தொழிலதிபருமாக திகழ்பவர் முகேஷ் அம்பானி.

இவரது மனைவியான நிட்டா அம்பானி இந்தியாவின் மிகவும் விலையுயர்ந்த சிற்றூர்ந்தை வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த சிற்றூர்ந்து ரூ.100 கோடி மதிப்புள்ளதாகும், அம்பானியின் சிற்றூர்ந்தின் விலையை விட இது அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிற்றூர்ந்து நிறத்தை மாற்றும் திறன்களைக் கொண்டுள்ளதுடன், மணிக்கு 250 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது ஆகும்.

இந்தக் சிற்றூர்ந்து உலகிலேயே 11 பேரிடம் மட்டும் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. (நி)



## ...கொம்புகளுடன் ...ும் முயல்கள் ...ல் வினோதம்

...தெரிவிக்கின்றனர்.

இதனால் முயல்களில் மருக்கள் போன்ற கட்டிகள் உருவாகி கொம்புகளாக காட்சி அளிக்கும்.

இந்த வைரஸ் பெரும்பாலும் தலை, காதுகள் மற்றும் கண் இமைகளைச் சுற்றி பாதிப்பதால் இந்த நிலை ஏற்படுகிறது.

இந்த வைரஸ் முயல்களுக்கு இடையில் மட்டுமே பரவுவது குறிப்பிடத்தக்கது. (நி)



## சர்வதேச பிரச்சினைகளை தீர்ப்பதில் இந்தியா முக்கிய பங்கு

### ரஷ்யா பாராட்டு

(மொஸ்கோ)

சர்வதேச அளவிலான பிரச்சினைகளை தீர்ப்பதில் இந்தியா முக்கிய பங்கு வைக்கிறது என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

நேற்று இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய நாட்டு மக்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் வாழ்த்து தெரிவித்து உள்ளார். ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடிக்கு புடின் வாழ்த்து செய்தி அனுப்பி உள்ளார்.

இந்திய சுதந்திர தினம் முன்னிட்டு, ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அறிவியல், தொழில்நுட்ப மற்றும் பிற துறைகளில் இந்தியா பரவலாக அங்கீகரிக்கப்பட்ட வெற்றியைப் பெற்றுள்ளது. உலக அரங்கில் முக்கிய பிரச்சினைகளை தீர்ப்பதில் இந்தியா முக்கிய பங்களிக்கிறது.

கூட்டு முயற்சிகள் மூலம் இந்திய ரஷ்ய ஒத்துழைப்பை தொடர்ந்து விரிவுபடுத்துவோம். எங்கள் நட்பு மக்களின் நலன்களுடன் முழுமையாக ஒத்துப்போகிறது. பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பு, உறுதித்தன்மையை வலுப்படுத்துவதை இருநாடுகளும் ஆதரிக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோல அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோவும் இந்திய சுதந்திர தினம் முன்னிட்டு வாழ்த்து தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடற்புழுக்களைக் கட்டுப்படுத்துதல்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நடைமுறையில் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகள் கழியும் போதோ அல்லது கால்நடைகள் விழுந்த பிறகோ தான் குடற்புழு மருந்தைக் கொடுக்க என்று கால்நடை வைத்தியரிடம் வருவார்கள். அந்த நிலையில் அவர்களுடைய பண்ணையில் ஏராளமான கால்நடைகள் கடுமையாக நோய்ப்பட்டோ அதிகளவில் மரணமடைந்தோ காணப்படும். பெரும்பாலானவர்களுக்கு தங்களுடைய கால்நடைகள் குடற்புழுக்களின் தாக்கத்தினால்தான் இறந்தன என்பது தெரியாது. வைத்தியரிடம் வேறு காரணிகளைச் சொல்லி சிகிச்சையை கேட்பார்கள். சட்டவிரோத சிகிச்சையாளர்கள் மற்றும் பண்ணைக் பொருள் கடைக்காரர்கள் பண்ணையாளர்கள் கூறும் துணைக் காரணிகளுக்கு சிகிச்சையை வழங்கச் சென்று கால்நடைகள் மேலும் இறக் கின்றன.

கால்நடைகளுக்கு குடற்புழு மருந்துகள் கால்நடைகளின் உடல் நிறைக்கே வழங்கப்படும். எனினும் பெரும்பாலான பண்ணையாளர்கள் உடல் நிலையை சரியாக கணிப்பது கிடையாது. உண்மையான நிறையை விட குறைந்த அளவு நிறையே அனுமானிப்பதால் புழுக்களை முற்றிலும் அழிக்க முடியாத அளவிலேயே வழங்கப்படுவதால் குடற்புழுக்கள் தப்பிப் பிழைத்து அந்த மருந்துக்கு எதிர்ப்பு நிலையை தோற்றுவிக்கின்றன. தொடர்ச்சியாக ஒரே மருந்தை வழங்குவதாலும் இந்த நிலை தோன்றுகிறது எனது அனுபவத்தில் சில பண்ணையாளர்கள் கால்நடைகளின் நிறையின் அரைவாசியையே (இறைச்சி நிறை) நிறையாக கருதுவார்கள். மேலும் குடற்புழு மருந்துகளை பண்ணைக் கடைகளிலேயே வாங்குவார்கள். அந்த மருந்துகள் காலத்துக்கு பொருத்த மற்றவை. குடற்புழுக்களை நீக்க முடியாதவை. ஒவ்வொரு புழுவும் ஒவ்வொரு காலத்தில் காணப்படும். அதற்கு பிரத்தியேகமான மருந்துகளை கொடுக்க வேண்டும். சில வேளைகளில் குடற்புழு மருந்துகளை நீண்ட காலம் காலாவதியாகும் வரை வாங்கி வைத்திருப்பார்கள்.

மருந்துகள் திரவம், மாத்திரை, தூள் எனப் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. அந்தந்த குடற்புழு மருந்துகளை சரியான முறையில் தான் கொடுக்க வேண்டும் சிலர் மாத்திரைகளை இடித்துக் கொடுப்பார்கள். குடற்புழு மருந்துகள் மாத்திரையாக இருக்கும் பொழுது நீண்ட நேரத்துக்கு உடலில் தங்கி வேலை செய்யும். அவற்றை தூளாக்கிக் கொடுக்கும் பொழுது உடலில் தங்காது உடனடியாகவே வெளியேறிவிடும். எனவே அந்தந்த வடிவத்தில் இருக்கின்ற குடற்புழு மருந்துகளை அப்படியே கட்டாயம் கொடுக்க வேண்டும். நாங்கள் பொதுவாக குடற்புழு மருந்துகளை ஓரளவு வெறும் வயிறாக காணப்படுகின்ற காலை நேரங்களிலேயே கொடுக்கச் சொல்லுவோம் இதன் காரணமாக உச்ச பயனை பெறமுடியும்.

குடற்புழு மருந்துகள் பரந்த வீச்சினை கொண்டிருக்க வேண்டும் அவை முதிர்ந்த, இளம் புழுக்கள் மற்றும் குடம்பி, முட்டைகளை அழிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுடன் கால்நடைகளுக்கு இலகுவாக வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அத்துடன் மனித பாதுகாப்பு மிக முக்கியமான விடயமாக கருதப்பட வேண்டும். சில குடற்புழு மருந்துகள் பால், இறைச்சியினூடாக, விலங்குகளின் கழிவின் ஊடாக ஏனைய கால்நடைகள் மற்றும் மனிதர்களுக்கு செல்லக் கூடியன. முடிந்தவரை பக்க விளைவற்ற / பக்க விளைவு குறைந்த மருந்துகளை கொடுக்க வேண்டும். நான் முன்பு கூறியது போல ஒரே மருந்தினை தொடர்ச்சியாக கொடுப்பதும் பிரயோசனம் கிடையாது. குடற்புழுக்கள் அந்த மருந்துக்கு இயைபாக்கம் அடைந்து விடும். எனவே கால்நடை வைத்தியரின் பரிந்துரைக்கமைய மாறுபட்ட மருந்துகளை பொருத்தமான மருந்துகளை கொடுக்க வேண்டும்

பெரும்பாலும் குடற்புழு நோய்த் தாக்கம் இளம் கால்நடைகளையே



பாதிக்கின்றன. இறக்கின்றன. ஏனெனில் அவை குடற்புழுக்களுக்கு அவற்றின் நச்சுகளுக்கு இயைபாக்கம் அடைந்திருக்காது. ஓரளவு பெரிய மாடுகள் குடற்புழுவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியினை [immunity] பெற்றிருக்கின்றன வெளிநாட்டு மற்றும் கலப்பு இன மாடுகளை விட நாட்டு இன மாடுகள் அந்தந்த ஊர்களில் உள்ள குடற்புழுகளுக்கு எதிரான இயைபாக்கத்தினையும் எதிர்ப்பு சக்தியினையும் பெற்றிருக்கும். இளம் விலங்குகளின் இழப்பு பண்ணையின் வருமானத்தை பாதிப்பதுடன் எதிர்காலத்தின் பண்ணையின் இருப்பையும் கேள்விக்கு உட்படுத்தும் இழப்பாகும்.

பொதுவாகப் பண்ணையாளர்கள் சினைப்பட்ட மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்கத் தயங்குவார்கள். முன்னைய கால குடற்புழு மருந்துகள் சிலவேளைகளில் அவற்றுக்கு பிரச்சினையை ஏற்படுத்தி இருந்தாலும் தற்காலத்தில் இது தொடர்பாக செய்யப்பட்ட பல விஞ்ஞான ஆய்வுகளின் அடிப்படையில் சினைக்காலத்திலும் பாதுகாப்பான மருந்துகள் சந்தையில் இருக்கின்றன. அதனை கால்நடை வைத்தியரிடம் பரிந்துரையைக் கேட்டு பெற்றுக் கொள்வது சிறப்பானது. பொதுவாக மாடுகளுக்கு முன் சினை காலத்திலும் பின் சினை காலத்திலும் கொடுக்காமல் இடைப்பட்ட காலத்தில் [between 4-7 months] வழங்கலாம். முன் சினைக் காலம் கருவின் உடல் கட்டமைப்புகள் தோற்றம் பெறுகின்ற காலம் என்பதுடன் அப்போது ஏற்படும் சிறிய அழுத்தமும் கருவை பாதிக்கக்கூடும். பின் சினைக் காலப்பகுதியிலும் மாடுகளுக்கு அழுத்தம் தரக் கூடாது என்பதால் குடற்புழு நீக்க மருந்துகளை நாங்கள் பரிந்துரைப்பது கிடையாது. எனினும் மேம்படுத்தப்பட்ட மருந்துகள் அந்தக் காலத்திலும் பாவிக்கக் கூடியதாக தற்பொழுது காணப்படுகின்றன.

பண்ணையாளர்கள் மழைக்காலத்தில் குடற்புழு மருந்துகளை தவிர்க்கின்றனர். இதுவும் தவறான ஒரு நடைமுறை. எங்களுடைய நாட்டில் வடகிழக்கு பருவமழை ஒக்டோபர்- நவம்பர்- டிசம்பர் மாதங்களில் பெய்கிறது. இந்த காலத்தில் தான் நீர்நிலைகள் நிரம்புகின்றன. நத்தைகள் பெருகுகின்றன. பெரும்பாலான குடற்புழுக்கள் நத்தைகளின் மூலமே பரவல் அடைகின்றன. இந்த நேரத்தில் கால்நடைகள் அந்தந்த பகுதியில் மேய்ச்சல் செய்கின்ற பொழுது இந்த குடற்புழு இலகுவில் கால்நடைகளுக்கு தொற்றுகிறது. எனவே மழைகாலத்துக்கு முன்னரும் மழைக்காலத்திலும் மழைக்காலத்தின் பின்னரும் கட்டாயம் இந்த குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்.


மழை காலத்தின் பின்னர் பொதுவாக கால்நடைகள், குளங்களை அண்மித்த பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடும் போது குடற்புழுத் தாக்கத்துக்கு உள்ளாவதோடு வறட்சியான காலப்பகுதில் எஞ்சிய நீர்நிலைகளின் தண்ணீரை அருந்துவது மூலமும் சில வகையான புழுக்களின் தொற்றுகைக்கு உள்ளாகின்றன.

குடற்புழு நீக்க மருந்தினை பொறுத்தவரையில் கன்றுகள் பிறந்து மூன்று கிழமைகளில் முதலாவது தடவை குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும் அதன் பின் ஒவ்வொரு மாதமும் ஆறு மாதம் வரையில் கொடுக்க வேண்டும். அதன்பின் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை ஒரு வருடம் வரை கொடுக்க வேண்டும். அதன் பின் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும் அந்தந்தப் பகுதியில் தன்மைக்கு ஏற்ப கால்நடை வைத்தியரின் பரிந்துரைக்கு அமைய ஏற்ப மாற்றம் செய்யலாம். ஒரே மருந்தை தொடர்ச்சியாக கொடுக்காமல் மாற்றி மாற்றி கொடுக்க வேண்டும். ஆடுகளைப் பொறுத்தவரையில் மூன்று கிழமைகளில் குடற்புழு மருந்தினை தொடங்க வேண்டும்.

அதன் பின் ஒவ்வொரு மாதமும் 3 மாதம் வரையில் மருந்துகளை கொடுக்க வேண்டும். அதன்பின் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மருந்தினை கொடுக்க வேண்டும் எருமைகளுக்கு அவை தாயின் கருப்பையில் இருந்தே குடற்புழுக்களை பெற்றுக் கொள்கின்றன. இதனால் முதற் கிழமையிலேயே நாங்கள் அவற்றிற்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்க பரிந்துரைக்கிறோம். அதேபோன்று எருமை மாடுகளின் தாய் மாடுகளுக்கும் இறுதிச் சினைக் காலத்திலும் குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்.

இலங்கையில் உலர் வலயத்தில் மழைக்காலத்தின் பின் பரம்பிஸ்ட்ரோம் என்று சொல்லப்படுகின்ற ஒருவித தட்டைப்புழு அதிகளவு பாதிப்பினை ஏற்படுத்தி கால்நடைகளின் இறப்புக்கு காரணமாக அமைகிறது. அது தொடர்பாக கூடிய கவனத்தை செலுத்துதல் வேண்டும். ஒரே நேரத்தில் பல புழுக்கள் கால்நடைகளை பாதிப்பதால் வீரியம் மிக்க நவீன மருந்துகளை கொடுப்பது சிறந்தது.

பண்ணையாளர்களுக்கு தெரியாத வகையில் குடற்புழுத் தாக்கம் கால்நடைகளைப் பாதிப்பதோடு வருடாந்தம் கணிசமான பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகின்றது. குடற்புழுத் தாக்கத்தால் ஏற்படும் கால்நடைகளின் வளர்ச்சிக் குறைவு அவற்றின் பருவமடைதலை தாமதப்படுத்துகின்றது, அவை சினைப்பட்டு கன்றை ஈனுவது தாமதமடைகிறது. இதனால் பால் உற்பத்தி செய்யத் தொடங்குவதும் தாமதமடைகிறது. இது மேலதிக பாரமரிப்பு செலவை ஏற்படுத்துகிறது. குடற்புழுத் தாக்கத்துக்கு உட்படும் மாடுகள் பொதுவாக குறைவான பாலையே உற்பத்தி செய்கின்றன. கால்நடைகளில் உற்பத்தி தொடர்பான பல நோய்களும் ஏற்பட ஏதுவாகின்றன. அத்துடன் உடல் வளர்ச்சி குறைவதால் இறைச்சிக்கு விற்கும் மாடுகளின் நிறை குறைந்து பெறுமதியும் குறைகிறது. கன்றுகளின் இழப்பு எதிர்கால மாடுகளுக்கு பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. சிகிச்சையின் செலவு மேலதிக பொருளாதார நட்டத்தை தருகின்றது. இப்படியாக பார்ப்பதற்கு சாதாரண விடயம் போல் தெரியும் குடற்புழுக்கள் கணிசமான பொருளாதார வீழ்ச்சியை இலங்கையின் கால்நடைத் துறைக்கு தருகின்றன. எனவே இதனை முறையாக கையாள்வதன் மூலம் இந்த இழப்புகளை தவிர்க்க முடியும்.



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 79ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றது.இந் நிகழ்வில் இந்தியாவின் தேசியக் கொடியை துணைத் தூதர் சாய் முரளி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து, இந்திய குடியரசுத் தலைவரின் வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் வாசித்தார். இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் , அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படங்கள்: சிவசாந்தன்)

## மன்னாரில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம்



(மன்னார்)

ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊடாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்ட நிகழ்வாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தாமரைக் குளத்தில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு விழுது நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட அலுவலர் டலிமா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், கிராம அபிவிருத்தி முன்னெடுத்தல் உள்ளிட்ட நிகழ்வாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், உள்ளடங்கலாக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (8-285)



இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினமான நேற்று வெள்ளிக்கிழமை பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இந்திய இராணுவத்தினரின் நினைவிடத்திற்கு இந்திய தூதுவர் சென்று அஞ்சலி செலுத்தினார்.

## கனிய மணல் அகழ்வுக்கு எதிரான போராட்டம் உறுதியான முடிவு வரும் வரை தொடரும்!
### போராட்டக்காரர்கள் தெரிவிப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் காற்றாலை கனிய மணல் செயற்றிட்டங்கள் தொடர்பில் உறுதியானதும் இறுதியானதுமான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து மன்னார் மக்கள் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்

மன்னார் பிரதான சுற்று வட்ட பகுதியில் மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பிய வாறும் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திய வாறும் 13 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பில் காற்றாலை செயற்றிட்டங்களை ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதாக ஜனாதிபதியினால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் உறுதியான முடிவு வரும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாகவே கடந்த வாரம் போராட்டம் இடம்பெற்ற நிலையில் ஒரு வாரகாலம் காற்றாலை செயற்றிட்டத்தை நிறுத்தி வைப்பதாக எரிசக்தி அமைச்சர் தெரிவித்த நிலையில் அவ் வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் நள்ளிரவு நேரங்களில் காற்றாலை செயற்றிட்டங்களுக்கான உதிரிப்பாகங்கள் மன்னார் நகருக்குள் மக்களின் எதிர்ப்பை மீறி கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 150 | 180 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 320 | 350 | 300 | 300 |
| கரட் | 500 | 500 | 600 | 600 | 600 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 120-300 | 300 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 140 | 130 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 350 | 220 | 300 |
| பீற்றூட் | 150 | 100 | 180 | 120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 450 | 500 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 400 | 200 | 300 |
| போஞ்சி | 700 | 800 | 800 | 600 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 100 | 100 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 200 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

## படுகொலைக்கு நீதி வேண்டி புங்குடுதீவில் போராட்டம்!

(அராலி)

புங்குடுதீவு தனியார் போக்குவரத்து சங்கத்தினர் நேற்றையதினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். கடந்த 10.08.2025 அன்று தனது வீட்டில் இருந்த வேளை வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட ஐயாத்துரை அற்புதராசா(அகிலன்) கொலைக்கு நீதிவேண்டியும் கொலையாளிகளை விரைந்து கைது செய்யக்கோரியும் இந்த போராட்டம் சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புக் கொடியை பறக்கவிட்டு, பதாகைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் புங்குடுதீவு - யாழ்ப்பாணம் இடையேயான போக்குவரத்து சேவைகள் நேற்றைய தினம் இடம்பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8-104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 846





காற்றிலும் மழையிலும் சாலை ஓரத்து விருட்சங்கள் பட்டபாட்டைச் சொல்லி முடியாது. சடசடவென்று மரக்கிளைகள் முறிந்து விழத் தொடங்கின. அப்போது அவற்றில் அடைக்கலம் புகுந்திருந்த பட்சிகள் கீச்சிட்டுக் கொண்டு நாலா திசைகளிலும் பறந்தோடின. சாலையில் போய்க் கொண்டிருந்த ஜனங்களும் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

காற்று மழையிலிருந்து தப்புவதற்காகச் சிலர் ஓடினார்கள். மரக்கிளைகள் தலையில் விழுந்து சாக நேரிடுமோ என்ற பயத்தினால் மற்றவர்கள் ஓடினார்கள். அண்ட கடாகங்கள் வெடிப்பது போன்ற இடி முழக்கத்தைக் கேட்டு அஞ்சி வேறு சிலர் ஓடினார்கள். மழை பிடித்துக் கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம், பகற்பொழுது சென்று இரவு நெருங்கி வந்தது. அன்றிரவே தஞ்சாவூர்க் கோட்டைக்குள் பிரவேசித்து விட வேண்டும் என்ற எண்ணத்தைச் சேந்தன் அமுதனும், பூங்குழலியும் கைவிட்டு விட்டார்கள்.

சேந்தன் அமுதனின் நந்தவனக் குடிலுக்கு அன்றிரவு போய்ச் சேர்ந்தால் போதும் என்று தீர்மானித்தார்கள். மழைக்கால இருட்டில் ஒருவரையொருவர் தைரியப்படுத்திக் கொண்டு, ஜாக்கிரதையாக நடந்தார்கள்.

"பூங்குழலி! நடுக்கடலில் எவ்வளவோ புயல்களையும் பெரு மழையையும் பார்த்தவளாயிற்றே நீ! மலை போன்ற அலைகளுக்கு மத்தியில் படகு விட்டுக் கொண்டு போகிறவள் ஆயிற்றே! இந்த மழைக்கு இவ்வளவு பயப்படுகிறாயே?" என்றான் சேந்தன் அமுதன்.

"நடுக்கடலில் எவ்வளவுதான் புயல் அடித்தாலும் மழை பெய்தாலும் தலையில் மரம் ஒடிந்து விழாதல்லவா? விழுந்தால் இடி தானே விழும்?" என்றாள் பூங்குழலி.

இவ்விதம் பூங்குழலி கூறி வாய் மூடுவதற்குள் அவர்களுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் சடசடவென்று மரம் முறிந்து விழும் சத்தம் கேட்டது. சேந்தன் அமுதன் பூங்குழலியின் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு மேலே செல்வதை நிறுத்தினான்.

"இனி அவசரப்பட்டுக் கொண்டு போவதில் உபயோகமில்லை. சாலை ஓரத்தில் இங்கே சில மண்டபங்கள் இருக்கின்றன, அவற்றில் ஒன்றில் சிறிது நேரம் தங்கி மழையின் வேகம் குறைந்த பிறகு மேலே போகலாம்!" என்றான் சேந்தன் அமுதன்.

"அப்படியே செய்யலாம் ஆனால் மண்டபத்தை இந்த இருளில் எப்படிக் கண்டுபிடிப்பது?" என்றாள் பூங்குழலி.

"மின்னல் மின்னும் போது பார்த்தால் தெரிந்து விடும். இருபுறமும் கவனமாகப் பார்க்க வேண்டும்!" என்றான் சேந்தன் அமுதன்.

வானத்தையும் பூமியையும் பொன்னொளி மயமாக்கிக் கண்களைக் கூசச் செய்த ஒரு மின்னல் மின்னியது.

"அதோ ஒரு மண்டபம்!" என்றான் சேந்தன் அமுதன்.

பூங்குழலியும் அந்த மண்டபத்தைப் பார்த்தாள். அதே மின்னல் வெளிச்சத்தில் அவர்களுக்கு முன்னால் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய மரம் விழுந்து கிடப்பதையும் பார்த்தாள். விழுந்த மரத்தினடியில் சிலர் சிக்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குடியானவனின் யோசனை



(நேற்றைய தொடர்ச்சி)

நல்லது உங்களுடன் வந்த உறவுக்காரர்கள் அனைவரையும் அழைத்து, எதுவும் தெரியாதது போல, நகைகள் எல்லாம் எங்களுக்கு திருப்தியாக இருந்தது. நாளைக்கு மாப்பிள்ளை வீட்டுக்கு போய் திருமணத்திற்கு நல்ல நாள் பார்க்கலாம் என்று சொல்லுங்கள், சரி என்று அனைவரும் சொல்லி விட்டு அவர்கள் வீட்டுக்கு திரும்பி செல்லும் போது ஒவ்வொருவர் பின்னால் ஒரு ஆளை தொடர்ந்து போக செல்லுங்கள். நகைகள் இருந்தது என்று நீங்கள் சொல்லியிருப்பதால், நகைகள் எடுத்தவன் எப்படியும் தான் எடுத்து வைத்த நகைகள் இருக்கிறதா என்று சோதனை செய்ய செல்வான். அவனை பின் தொடர்பவன் அதை கண்டு பிடித்து விடலாம் என்று யோசனை சொன்னான்.

அதன் படி பெண் வீட்டார் அன்று உடன் வந்தவர்கள் அனைவரையும் அழைத்து நாளை மாப்பிள்ளை வீட்டுக்கு போகலாம். நகைகள் எல்லாம் திருப்தியாக இருந்தது என்று சொன்னார்கள். வந்தவர்களில் களவாணியும் இருந்தான். அவனுக்கு இதை கேட்டவுடன் "கருக்" என்று இருந்தது. அதெப்படி? நாம்தான் நகைகளை [illegible] மிளகாய்களை போட்டிருந்தோமே, இவர்களுக்கு நகைகள் எப்படி கிடைத்திருக்கும்? என்று யோசனையுடனே, திரும்பும்போது வீட்டுக்கு போகாமல் அவன் அந்த நகைகளை புதைத்து வைத்த இடத்துக்கு சென்று அதை தோண்டி, கையில் எடுத்து பார்த்தான், எல்லாமே இருந்தது.

அப்படி என்றால் பெண் வீட்டாருக்கு நகை எப்படி கிடைத்திருக்கும்? யோசனையுடன் அவசர அவசரமாக அதே இடத்தில் புதைத்து விட்டு விறு விறுவென வீட்டுக்கு வந்துவிட்டான். அவனை பின் தொடர்ந்து வந்த ஆள் அந்த இடத்தை மீண்டும் தோண்டி அனைத்து நகைகளையும் எடுத்து கொண்டு வந்து பெண் வீட்டாரிடம் கொடுத்து விட்டான். பெண் வீட்டார் குடியானவனை சந்தேகப்பட்டதற்கு வருத்தப்பட்டு மன்னிப்பு கோரினர்.

மறு நாள் பெண் வீட்டார் அவர்கள் உறவினர்களுடன் மாப்பிள்ளை வீடு சென்று நல்ல முகூர்த்த நாளை குறித்து, அன்று குடியானவனுக்கு திருமணம் செய்வித்து பெண்ணை அனுப்பி வைப்பதாக உறுதி கூறி சென்றனர். அவர்களுடனே வந்த உறவினர்கள் மகிழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் களவாணிக்கு மட்டும் அதெப்படி? அதெப்படி? என்று சந்தேகம் வந்து கொண்டே இருந்தது.

திடீரென்று சந்தேகம் வர நம்மை ஏமாற்றுவதற்காக இந்த நாடகம் போட்டிருப்பார்களோ என்று யோசித்தவன் வீடு வந்தவுடன், இரவோடு இரவாக அவன் நகைகளை புதைத்து வைத்த இடத்துக்கு சென்று பார்த்த பொழுது அங்கு வைக்கப்படிருந்த நகைகள் எடுக்கப்பட்டிருந்தன. "திருடனுக்கு தேள் கொட்டியது போல இருந்தது".

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது எண்ணம், சொல், செயல் மூன்றும் சமமாய் இருக்கும்போதே நமது நேர்மையை மற்றவர் உணர்வர்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கூறியதில் கவனம் செலுத்துங்கள்

செம்மணி வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லக்கூடிய ஏதுக்கள் இருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் கூறிய விடயம் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும்.

செம்மணி வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் தற்போது செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகள் தொடர்பில் பதிலளிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளனர்.

எனவே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் கூறியதுபோல, அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

அவ்வாறு அவர்கள் தப்பிச் செல்வார்களாயின் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான நீதி விசாரணை காலதாமதமாகக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என்பதுடன் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விபரங்களையும் அறிந்து கொள்வதில் கடினங்கள் ஏற்படலாம்.

இதுதவிர, செம்மணியில் இருந்த இராணுவ முகாமில் அல்லது செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புபட்ட இராணுவ முகாம்களில் பணியாற்றிய – அதேநேரம் ஏலவே இருக்கக்கூடிய செம்மணி வழக்குகளுடன் சம்பந்தப்படாத இராணுவத்தினரும் படை அதிகாரிகளும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லக் கூடிய வாய்ப்புகளும் உண்டு.

அதாவது செம்மணி மனிதப் புதைகுழி என்பது ஒரு சில இராணுவத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்க முடியாது.

மாறாக, செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் படைத்தரப்பினர் பலருக்குத் தொடர்பு உண்டு என அனுமானிப்பதில் தவறில்லை.

இதற்கும் மேலாக இராணுவ அதிகாரிகள், இராணுவத் தரப்பினர் என்ற எல்லை கடந்து, முன்னைய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரச தரப்பினர் ஆகியோரும் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நிலைமைகள் இருக்கலாம்.

சிலவேளைகளில் கட்டளை வழங்கக்கூடிய உயர் அதிகார மட்டத்தின் உத்தரவின் பின்னணியாகக்கூட செம்மணி மனிதப் புதைகுழிகள் இருக்க முடியும்.

எனவே செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் உரிய நீதி விசாரணைகள் இடம்பெறுவதற்கு சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினர் உள்ளிட்டவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லாமல் பார்த்துக் கொள்கின்ற தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்தினுடையதாகும்.

ஆகவே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கூறிய விடயம் தொடர்பில் நீதியை விரும்புகின்ற அனைத்துத் தரப்புகளும் அதிகூடிய சிரத்தை காட்டுவது அவசியமாகும்.

### தொழிற்கல்வியை முன்னேற்றுவதன் மூலம்

# பொருளாதார ஸ்திரத்தன்மையை உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கம்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

தொழிற்கல்வியை முன்னேற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கம் எனக் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கல்வி முறையின் கீழ் மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம் மற்றும் வணிகப் பாடங்களைத் தேர்வு செய்கின்றனர். அந்தப் பாடங்களைப் கற்பதற்கு போதுமான தகைமைகள் இல்லாத பிள்ளைகள் கலைத்துறை பாடங்களைத் தேர்வு செய்கிறார்கள்.

அவர்களில் சித்தியடையத் தவறும் மாணவர்கள்தான் தொழிற்கல்வியை நோக்கித் திரும்புகிறார்கள்.

தொழிற்கல்வி என்பது அத்தகைய தோல்விகளுக்குப் பின்னர் திரும்ப வேண்டிய ஒரு துறை அல்ல. அது மாணவர்கள் தேர்வாக இருக்க வேண்டும்.

எமது கல்விச் சீர்திருத்தங்களில் நாம் அடைய எதிர்பார்க்கும் நோக்கம், மாணவர்கள் 10ஆம் வகுப்பை அடையும் போது அவர்கள் எந்தத் தொழிலைத் தேர்வு செய்ய வேண்டும் என்பது குறித்த தெளிவை அவர்களுக்கு வழங்குவதும், அந்தப் பாதையை நோக்கி அவர்களை வழிப்படுத்துவதும் ஆகும்.

தொழில்நுட்பம் வேகமாக மாறி வருகிறது. எமக்குப் பல்வேறு தொழில்முறை அறிவு கொண்ட மனித வளம் தேவை. எனவே அந்த மாற்றத்திற்கு ஏற்ப தகவலமைத்துக் கொள்ளும் திறனையும் நெகிழ்வுத் தன்மையையும் அறிவையும் எமது பிள்ளைகளுக்கு நாம் தொடர்ந்து வழங்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு அறிவை வழங்குவதைப் போலவே, அவர்களை மனித நற்பண்புகள் நிறைந்தவர்களாக மாற்றுவதும் அவசியம். புதிய உலகிற்குள் பிரவேசிப்பதற்கு தொழிற்கல்வி அவசியம் என்பதால் எமது கல்விச் சீர்திருத்தங்களில் தொழிற்கல்விக்கு விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்தக் கண்காட்சியின் மூலம் பிள்ளைகள் பல்வேறு தொழில்களைப் பற்றிய சிறந்த விளக்கங்களைப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன் என்றார். (ம-7)

## இந்திய பிளாஸ்டிக் கழிவுகளால் இலங்கையின் கடற்கரை பாதிப்பு

(கொழும்பு)

தென்மேற்குப் பருவக் காற்று காரணமாக இந்தியாவில் இருந்து பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகள் அதிகளவில் இலங்கையின் கடற்கரைகளில் சேருவதாகக் கடல் சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறிப்பாக கல்பிட்டி, நீர்கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் நெடுந்தீவு கடல் பகுதிகளில் இந்தக் கழிவுகள் பெரும்பாலும் கரைதட்டுவதாகக் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் சமந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் எதிர்காலத்தில் குறித்த விடயம் தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்றும் சுற்றுச்சூழல் பிரதியமைச்சர் அன்டன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். (ம-7)

## ஒரு தொகை சட்டவிரோத ஆயுதங்கள் மினுவாங்கொடயில் கண்டுபிடிப்பு

மினுவாங்கொட பகுதியில் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது வீடொன்றிலிருந்து T-56 ரக துப்பாக்கி, ஒரு கைத்துப்பாக்கி, T-56 தோட்டாக்கள், கைத் துப்பாக்கித் தோட்டாக்கள், மூன்று வாள்கள் மற்றும் இரண்டு கத்திகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றிருந்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே குறித்த சோதனை நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளரான விமான நிலைய, இலங்கை சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் சட்டவிரோதமாக துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களை வைத்திருந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## சீதுவ கொலைச் சம்பவம் தொடர்பில் எழுவர் கைது

(சீதுவ)

சீதுவ, எரியகஹலிந்த பகுதியில் கடந்த 12ஆம் திகதி கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு 40 வயது நபர் ஒருவர் உயிரிழந்தநிலையில், இக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய தாகக் கருதப்படும் ஐந்து சந்தேக நபர்களையும் குறித்த நபர்களுக்கு உதவியாக இருந்த் மேலும் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து மூன்று கத்திகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதில் சீதுவ பகுதியைச் சேர்ந்த 17, 18,21,25,27 மற்றும் 44 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் கொழும்பு நீதவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாக சீதுவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

### அநுராதபுரத்தில் புதையல் தோண்டல்

## பிரதிப் பொலிஸ்மா அதிபரின் மனைவி உட்பட எண்மர் கைது

அநுராதபுரம் ஷ்ரவஸ்திபுர பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் மனைவி உள்ளிட்ட 8 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (14) அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி ஷ்ரவஸ்திபுர திபிரிகடவல பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு அருகில் சிலர் புதையல் தோண்டுவதாக அநுராதபுரம் பொலிஸாருக்கு இரகசியத் தகவலொன்று கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கிருந்த பெண் ஒருவர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 39

சொக்கன்

அப்போதும் அங்கிருந்த ஃபிரெஞ்சு அதிகாரிகளுக்குச் சந்தேகம் வரவில்லை. நோர்வேக்குப் போக வேண்டிய படகுகளில் எங்கே பார்த்தாலும் இஸ்ரேலிய முகங்கள் தெரிகிறதே ஏன்? என்று யாரும் கேள்வி கேட்கவில்லை.

உற்சாகமாக மொசாட் ஐந்து போர்ப் படகுகளையும் கடத்துவதற்கு நாள் குறித்தது. *1969 டிசம்பர் 24.*

மறுநாள் கிறிஸ்மஸ் செர்பார்கில் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்காகத் தேவாலயங் களை நோக்கிச் சென்று கொண் டிருந்த நேரம் துறை முகத்தில் இஸ்ரேல் மாலுமிகள் ஊழியர் கள் மட்டும் செம பிஸியாக உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அவர்களுடைய இரகசியப் பயணம் தொடங் கியது. அதிக ஆர்ப் பாட்டம் இல்லாமல் துறைமுகத்தின் பின் வாசல் வழியாக ஐந்து படகுகளும் ஒவ்வொன்றாக ராத்திரி இருட்டில் நழுவிச் சென்றன.


அன்றைக்கு அவர்கள் பயணம் செய்த பாதை மிகவும் ஆபத்தானது.

கொஞ்சம் அசந்தாலும் போர்ப் படகுகள் தண்ணீருக்கு அடியில் ஒளிந்திருக்கும் பாறைகளில் இடித்துக் கொண்டு கவிழ வேண்டியது தான்.

ஆனால் அதிர்ஷ்டம் இஸ்ரேலின் பக்கம் இருந்தது. ஐந்து படகுகளும் எந்த அசம்பாவிதமும் இல்லாமல் துறைமுகத்தைக் கடந்து கடலுக்குள் நுழைந்துவிட்டன.

ஒரே ஒரு பிரச்சினை இந்தப் படகுகளில் இஸ்ரேல் சென்று சேரும் அளவுக்குப் போதுமான எரி பொருள் இல்லை பாதிக்கடலில் பெட்ரோல் பங்கெல்லாம் கிடை யாதே!

அதற்கும் மொசாட் ஓர் ஏற்பாடு செய்திருந்தது. சென்ற அத்தியாயத்தில் நாம் பார்த்த அதே ஷீர்ஸ்பெர்க்ஏ கப்பல் 150 தொன் எரிபொருளுடன் வந்து சேர்ந்தது.



அப்புறமென்ன? நடுக்கடலில் எரிபொருள் நிரப்பிக்கொண்ட போர்ப் படகுகள் ஜிவ்வென்று வேகம் பிடித்துப் பறக்கத் தொடங்கின .ஃபிரெஞ்சுக்காரார்கள் தூங்கி எழுந்து அச்சச்சோ படகைக் காணோம் என்று அலறுவதற்குமுன்னால் அவை ரொம்பத் தூரம் சென்று மறைந்துவிட்டன.

இரண்டு நாள் கழித்து ஐந்து போர்ப் படகுகளும் இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்த போது யூதர்கள் இந்த வெற்றியை தோரணம் கட்டிக் கொண்டாடினார்கள். இஸ்ரேலியக் கூற்படை மொசாட் டை நன்றி யுடன் பார்த்தது.

அரசாங்கம் மட்டுமில்லை இராணுவம் காவல் துறை என இஸ்ரேலில் எதுவும் மொசாட்டின் தயவு இல்லாமல் இயங்க முடியாது என்பது மீண்டும் ஒரு முறை உறுதி செய்யப் பட்டது!

## சுண்டைக்காய் தேசம்

ஒரு சினிமாவில் இன்னும் மீசைகூட அரும்பாத ஒல்லிப்பிச்சிக் கதாநாயகன் ஏழெட்டு அடியாள்களைத் தன்னந்தனியாகச் சமாளிக்கிறான் இம்மாம் பெரிய தடிமாட்டுத் தாண்டவராயன்களை யெல்லாம் சும்மா அப்படியே தூக்கி வீசுகிறான்.

இதைப் பார்க்கிறவர்கள் நம்பமுடியாமல் சிரிக்கிறார்கள் ஏன் ஐயா கதை விடுறதுக்கு ஒரு லிமிட் இல்லை?

ஆனால் ஒருவேளை இதே சம்பவம் நிஜத் தில் நடந்தால் நம்முடைய ரியாக்ஷ்ன் எப்படி இருக்கும்? அதை விட அந்தத் தக்கனூண்டு பையனால் தூக்கி வீசப் படுகிற பயில்வான்களெல்லாம் எவ்வளவு அவமானமாக உணர்வார்கள்!

கடந்த அறுபது ஆண்டுகளாக இஸ்ரேல் இதைத் தான் செய்துகொண்டிருக்கிறது. அதுவும் ஒரு முறை இரண்டுமுறை அல்ல திரும்பத் திரும்பப் பலமுறை!

மத்திய கிழக்கில் உள்ள சவுதி அரேபியா, இரான், ஈராக், சிரியா, ஜோர்டான், துருக்கி, இந்தப் பக்கம் எகிப்து, லிபியா என எந்த நாட்டை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அத்தனையும் மெகாசைஸ் மகாதேவன்கள். அவற்றோடு ஒப்பிடும்போது இஸ்ரேல் ஒரு சுண்டைக் காய்.

ஆனால் அத்தனூண்டு சுண்டைக்காயை யாராலும் நசுக்கி எறிய முடியவில்லை. காரணம் அமெரிக்கா மற்ற மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலுக்குக் கொடுக் கிற ஆதரவு.

இவர்கள் பணம் ஆயுதம் என்று ஊட்டி வளர்ப்பதால்தான் சுற்றியிருக்கிற எல்லோர் கண்களிலும் இஸ்ரேல் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருக்கிறது.

ஆக இஸ்ரேலின் வாலை நறுக்கவேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி வெளியிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கிற உதவிகளை நிறுத்த வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்று பல அரபு நாடுகள் கூட்டாகச் சேர்ந்து யோசிக்க ஆரம் பித்தார்கள்.

மிஸ்டர் அமெரிக்கா, மிஸ்டர் ஐரோப்பா, மற்ற உலக நாடுகளே நீங்க இந்தப் பொடிப் பய இஸ்ரேலுக்குக் கொம்பு சீவி விடறதை உடனடியா நிறுத்தணும் இல்லாவிட்டால் அப்புறம் உங்களுக்கு தான் அநாவசியப் பிரச்சினை.

அரபு நாடுகள் இப்படி மிரட்டியதும் அமெரிக்கா சிரித்தது. மற்ற தேசங்களும் இஸ்ரேலுக்கு வழங்குகிற உதவிகளை நிறுத்திக் கொள்ளவில்லை.

எரிச்சலடைந்த அரபு நாடுகள். பிரம் மாஸ்திரத்தைக் கையில் எடுத்தன. *1973 அக்டோபர் 17* ஆம் திகதி முதல் இஸ்ரேலின் கூட்டாளிகளுக்கு எண்ணெய் ஏற் றுமதி செய்வதில்லை என்று அறிவித்துவிட் டார்கள்.

இந்தத் தடையால் அநேகமாக எல்லா உலக நாடுகளும் பாதிக் கப்பட்டன. பெட்ரோல் டீசல் இல்லாமல் பைக், கார், லாரி, பஸ் தொடங்கி பெரிய இயந்திரங்கள் தொழிற்சாலைகள் வரை சகலமும் நின்றுபோனது மின்சார விநியோகம் கடுமையாகப் பாதிக் கப்பட்டது. திரு விளையாடல் படத்தில் சிவ( ரஜி) பெருமானோடு சேர்ந்து அண்ட சராசரங்களும் அசை வில்லாமல் உறைந்து போனது போன்ற நிலைமை!

கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரை அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் உலுக்கிய இந்த ஆயில் தட்டுப்பாடு 1974 மார்ச் மாதம் முடிவுக்கு வந்தது. ஆனாலும் அதன் அதிர்வுகள் பல வருடங்களுக்கு நீடித்துக்கொண்டிருந்தன.

அதேசமயம் இந்தச் சம்பவத்தால் நிறைய தேசங்களுக்குக் கண் திறந்தது. அரபு நாடுகளிடம் நிறைய எண்ணெய் வளம் இருக்கிறதால் தானே அவங்க நம்ம உச்சந் தலையில ஏறி உட்கார்ந்து கொண்டு இஷ்டப்படி ஆடுகிறார்கள்?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாடு முழுவதும்...

செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த சுற்றி வளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் குற்றவியல் மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 616 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 13 பேர் நேரடியாகப் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், 265 பேருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் 161 பேருக்கு எதிராக செயற்பாட்டிலுள்ள கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் மதுபோதையில் வாகனம் ஓட்டியதற்காக 72 பேரையும், கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதற்காக 18 பேரையும் கைது செய்துள்ளதுடன் போக்குவரத்து விதிமீறல்களுக்காக 3,567 பேர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## பாவனையற்ற...

பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் பொலிஸார் சடலத்தை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இவரது மனைவி, பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் என்றும் இவர் தனித்து வாழ்ந்து வந்துள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருகிறது. (ம-7)

## விமல் வீரவன்ச...

பட்டிருந்தது.

இதன்படி நேற்றுக் காலை 9 மணிக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி விமல் வீரவன்ச 3 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தார். (ம-7)

## நல்லூர்...

ஜெயமகா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் ஆலய மஹோற்சவம் தற்போது இடம்பெற்று வருகிறது. ஆலயத்திற்கு வெளிநாடுகளில் இருந்தும் வடமாகாணத்திற்கு வெளியில் இருந்தும் கூட ஏராளமானவர்கள் வருகை தந்துள்ளனர்.

எதிர்வரும் வாரம் ஆலயத்தில் விசேட திருவிழாக்கள் நடைபெறவுள்ளதால், ஆலயத்திற்கு வருவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஆலயச் சூழலில் திருடர்களின் நடமாட்டங்களும் அதிகரித்து காணப்படுகிறது. திருட்டுக்கள் மற்றும் குற்றச்செயல்கள் ஆலயச் சூழலில் நடைபெறாது தடுப்பதற்காக ஆலயச் சூழலில் சிவில் மற்றும் சீருடையுடன் 600க்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும் திருட்டுக் கும்பல்கள் நல்லூர் திருவிழாவிற்கு வருகை தந்துள்ளதாக கிடைக்கப்பெற்றுள்ள புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் திருட்டுச் சந்தேகநபர்களை அடையாளம் காணக்கூடிய விசேட பொலிஸ் அணியினரை வரவழைத்து கடமையில் ஈடுபடுத்தியுள்ளோம்.

எனவே ஆலயச் சூழலில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும், அவர்கள் தொடர்பில் சீருடையில் கடமையில் இருக்கும் பொலிஸாருக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறும் மேலும் கேட்டுக் கொண்டார். (ம-7,33)

## தேர்தல்...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கொலைகாரக் கும்பல்கள், பாதாள உலகக் கும்பல்கள், போதைப் பொருள் கும்பல்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்கள் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் முறையான திட்டமோ செயற்பாடோ இல்லை.

ஹோமாகம மீகொட பகுதியில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டி, பாதுகாப்புப் பிரதி அமைச்சரின் தொகுதியிலேயே இத்தகைய குற்றங்கள் நடப்பதாகவும், அரசாங்கம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறிவிட்டதாகவும் விமர்சித்தார்.

அரசாங்கம் சிவில் பாதுகாப்புக் குழுக்கள், ஊர்காவல் குழுக்கள், இளைஞர் கழகங்கள், விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள், மகளிர் சங்கங்கள், மரண உதவி சங்கங்கள், மற்றும் பரிபாலன சபைகளின் அதிகாரங்களை ஜே.வி.பி மூலம் அரசியல் மயமாக்கி, பலவந்தமாக கைப்பற்றுவதாக சஜித் குற்றஞ்சாட்டினார்.

இதற்கு முன் இவ்வாறு அரசியல் மயமாக்கல் நடந்ததில்லை. இது ஜனநாயகத்தை அழிக்கும் எதேச்சதிகார முயற்சி என்று அவர் கூறினார்.

மேலும், இத்தகைய செயல்கள் மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பறிக்கும் முயற்சியாக உள்ளதாகவும் இதை எதிர்க்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளதாகவும் வலியுறுத்தினார்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், இது மக்களுக்கு அநீதி இழைப்பதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே மக்களின் பிரச்சினைகளுக்கு உரத்த குரல் எழுப்புவதாகவும், ஓய்வூதியம் பெறுவோர், பட்டதாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முன்னின்று செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தின் முட்டாள்தனமான முடிவுகள்நாட்டை மேலும் நெருக்கடியில் தள்ளுவதாகவும் விமர்சித்தார். (ம-7)

## பொலிஸ்மா...

திஸாநாயக்கவை சந்தித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மேலும், ஜனாதிபதிக்கு பொலிஸ்மா அதிபர் நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய இலங்கை பொலிஸின் 37 ஆவது பொலிஸ்மா அதிபர் ஆவார். இலங்கை பொலிஸ் சேவையில் கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய மூன்று நிலைகளையும் கடந்து பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தெரிவான முதலாவது பொலிஸ்மா அதிபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127











































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினைகளை...

எடுக்கப்படும் என மின்சக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயன்பாட்டின் ஊடாக 70 சதவீத மின் உற்பத்தியை மேற்கொள்வதே எமது இலக்காகும். அதனடிப்படையில் 5 வருடங்களுக்குள் அதாவது 2030ஆம் ஆண்டாகும் போது மின்கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இந்த இலக்கை அடைவதற்கு மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை மிகக் குறைந்த செலவில் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும்.


அதற்கமைய மூன்று பிரதான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் ஸ்திரத்தன்மை ஆகியவையே அந்த மூன்று பிரதான காரணிகள் ஆகும். இவை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை கிடைத்த பின்னரே வேலைத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப் படுகிறது. ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவில் சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நீர் வழங்கள் வடிகால் அமைப்பு அதிகார சபை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், புவி சரிதவியல் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவுக்கு ஒரு வார காலம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் இக்குழுவுடனான முதலாவது கூட்டம் இடம்பெறவுள்ளது. ஒரு வாரத்துக்குள் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் அந்தத் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் அதற்கு எடுக்கும் காலம் என்பவற்றை பரிந்துரைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வேலைத்திட்டம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றார். (ம-7)

(C-3658)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் வரவேற்பாளர்கள்தேவை. (5018)

**076 830 3931**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## மணப்பெண் தேவை

01. யாழ், இந்து, 1985, ரேவதி, Computer Engineering, Germany Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 31625
02. கொழும்பு, R/C, 1993, அத்தம், MSc, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 32886
03. தெல்லிப்பழை - மீசாலை, R/C, உத்தரம், 1992, Auto Mobile Engineer - UK, Austrialia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 31313
04. சுன்னாகம், இந்து, 1996, மிருகசீரிடம், Bachlor Of Engineering, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 32933
05. கொக்குவில் - வண்ணார்பண்ணை, 1994, ஆயிலியம், BSc (Hons), IT Singapore, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 46511
06. காரைநகர், இந்து, 1994, மகம், MSc graduated, uk மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54246
07. நீர்வேலி - காரைநகர், 1991, திருவோணம், B.Engineer, Hons Netherland மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54135
08. அல்லைப்பிட்டி - வண்ணார்பண்ணை, 1988, விசாகம், BSC Computer Network and Cyber Security, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33784
09. இளவாலை - சங்கானை, 1990, பூரம், Aeronautical Engineer, Italy Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54248
10. இணுவில் - உரும்பிராய், 1989, பூசம், Masters of Professional Accounting, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 45173

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (5060)

S.Sharma J.P | 077 539 3728 | 077 803 8193
www.thaalee.com

## வேலைவாய்ப்பு

நெல்லியடியில் புடவைக் கடைக்கு விற்பனைப் பெண்/ஆண் பணியாளர்கள் தேவை. வடமராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (1433)

**077 312 8378**

## காணி விற்பனைக்கு

- சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள தனங்களப்பு சந்திக்கு அண்மையில் தென்னை மரங்கள் உள்ள காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளன.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உள்ளது.

(5045)

**077 172 1074**

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (1440)

**076 889 1308**
**077 839 3974**

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. (5031)

**0771298159**


## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)

V2 "நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி





150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
(5053)

Hotline : 071 535 7799/ 071 535 7803

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 168/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2650/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1445)

Happy Supermarket
07[illegible]

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3655)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## கிட்னி தேவை

AB+ குருதி வகை உடையவருக்கு அவசரமாகக் கிட்னி தேவை. (5059)

தொடர்புகளுக்கு
**0776161376**

## உடன் விற்பனைக்கு

யாழ்.KKS வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில், KKS வீதி முகப்புடன் 150 அடி நீளமும் 150 அடி அகலமும் கொண்ட காணித்துண்டு விற்பனைக்குண்டு. இதனை 15X150 ஆக பிரித்தும் விற்கப்படும். (C-3657)

தொடர்பு: **077 723 2535**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. [illegible], பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org